# தமிழ்ப் பள்ளிகள்

தமிழர் தாங்கள் வாழ்ந்த நிலத்தை விட்டு போர், இயற்கை அழிவு, அரசியல் போன்ற காரணங்களினால் புலம்பெயர்ந்து அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். தமிழர் எங்கெல்லாம் புலம்பெயர்ந்து வாழ்கின்றனரோ அங்கெல்லாம் தமிழ்ப் பள்ளிகளை உருவாக்கியுள்ளனர். புலத்தில் வாழும் சிறார்களுக்கு தாய்மொழியைக் கற்பிக்கவும் எமது மொழி அழிந்துவிடக்கூடாது என்ற நோக்கிலும் தமிழரால் தமிழ்ப்பள்ளிகள் உருவாக்கப்பட்டன. இப் பள்ளிகள் ஒவ்வொரு நாட்டிலும் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. பெற்றோர்கள் தாங்கள் வாழும் இடங்களுக்கு அருகேயுள்ள தமிழ்ப்பள்ளிகளுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்பிவைக்கின்றனர். பள்ளிகள் சனி, ஞாயிறு, புதன் போன்ற நாட்களில் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பள்ளிகளிலும் மழலையர் நிலையில் இருந்து வளர்தமிழ்-12 வரையிலான வகுப்புகளுக்கு தமிழ்மொழி கற்பிக்கப்படுகின்றது. மாணவர்கள் தமிழ்மொழியை அடிப்படையிலிருந்து படிப்படியாகப் பேச, வாசிக்க, எழுதக் கற்றுக்கொள்ளும் இடமாக இப் பள்ளிகள் விளங்குகின்றன. இங்கு ஆண்டு விழா நடைபெறுகின்றது. ஆண்டு விழாவில் நடனம், நாடகம், இசை போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இவற்றினூடாக மாணவர்களின் பேச்சுத்திறனையும் கலைத்திறனையும் வளர்க்கும் களமாக இப் பள்ளிகள் அமைகின்றன. மேலும் திருக்குறட்போட்டி, பேச்சுப்போட்டி போன்ற போட்டிகளினூடாக மாணவர்களின் மொழித்திறனைப் பள்ளிகள் வளர்த்து வருகின்றன. மாணவர்களின் கற்றல் திறனை அளவிடும் வகையில் ஆண்டுதோறும் அனைத்து வகுப்புகளுக்கும் தேர்வுகள் இடம்பெறுகின்றன. இத் தேர்வுக்குரிய வினாத்தாள்கள் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் அணியஞ் செய்யப்பட்டு அனைத்து நாட்டிலுள்ள கல்விக் கழகங்களுக்கும் அனுப்பப்பட்டு இத் தேர்வு நடாத்தப்படுகிறது. புலம்பெயர்ந்து வாழும் எமது சிறார்கள் இன்று தமிழ் மொழியிலும் கலையிலும் சிறந்து விளங்குகின்றனர் என்பதில் ஐயமில்லை. எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணுகின்ற கலைகளும் இங்கு கற்பிக்கப்படுகின்றன.